தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்

MCOP. No. 109/2023

06.03.2026

**திரு . சுவாமிநாதன் , த/பெ. சுப்ரமணியன்**

PW : 1

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

விபத்து சமயத்தில் நான் அங்கு இல்லை. என் தாய் பயணம் செய்த வாகனம் 1 ம் எதிர்மனுதாரரான என் தம்பிக்கு சொந்தமானது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் 1 ம் எதிர்மனுதாரருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. இந்த விபத்தினால் என் அப்பாவும் அம்மாவும் இறந்து விட்டார்கள் என்றால் சரிதான். விபத்தின் போது 1 ம் எதிர்மனுதாரரின் வாகனம் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யவில்லை என்றால் சரியல்ல.

விபத்து சம்பந்தமாக 1 ம் எதிர்மனுதாரருக்கு எதிராக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் மது அருந்திவிட்டு வாகனத்தை இயக்கியது தான் காரணம் என்றால் சரியல்ல. இந்த விபத்து சம்பந்தமான குற்ற வழக்கு ஆவணங்களை ஏதேனும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேனா என்றால் ஏற்கனவே ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த விபத்திற்கு 1 ம் எதிர்மனுதாரர் முழு காரணம் என்றாலும், 1 ம் எதிர்மனுதாரர் தான் நஷ்டஈடு கொடுக்க வேண்டும் என்றாலும் சரியல்ல. நான் கோரியுள்ள நஷ்டஈடு மிக அதிகம் என்றாலும், 2 ம் எதிர்மனுதாரர் பொறுத்து இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

LATHA Digitally signed by LATHA Date: 2026.03.06 11:09:42 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்